# தனிமை

எழுத்தொன்றுசெத்துக்கிடக்கிறது
அனாதைப்பிணாமாய்
எழுதியஆவியோசுற்றியலைகிறது
அரற்றியபடி

ஊமையானஉண்மைகள்ஒப்பாரி
வைக்கின்றனஅழுதுபுரண்டு
சிதிலமடைந்தஇதயம்கலைத்துப்போட்ட
பிரதிக்குள்ளிருந்துதுருத்துகிறதுவலப்பக்கமாய்
அழுகுதலின்அரிதாரமும்நாற்றத்தின்வாசனையும்
முன்மொழியப்படுகின்றனஅவசரமாய்சங்கூதி

பாடையில்கிடத்தப்பட்ட அனாதைபிணத்துக்கு
குவிகின்றனமாலைகளும்சில்லரைகளும்
சடலங்களாய்கணக்கின்றனஉயிர்நாடியை
தொலைத்திட்டஅவ்வெழுத்துக்கள்

தன்வயிற்நிரப்பஇடுகாட்டைவட்டமிடுகின்றன
பிணந்தின்னிக்கழுகுகளும்காகங்களும்

புதைக்கப்பட்டதைஅடையாளப்படுத்துகிறது
குறிகளின்ஆலிங்கனத்தால்ஆனசமாதி
சுருட்டும்சாராயமும்படையலாக்கி
அவிழ்த்துவிடப்படுகின்றனஅம்மணங்கள்
தொடரும்கேளிக்கைகூத்துகளில்இடம்பிடிக்க
கல்லறைஒன்றைகட்டிக்கொள்ளச்சொல்லி
நம்மைஓலமிட்டழைக்கின்றன பிணவெழுத்துக்கள்.